# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

சாதியால் சீரழிந்த சமுதாயம் என்று இந்தச் சமுதாயத்துக்கு ஒரு அவப்பெயர் உண்டு. வருணம் என்றும், சாதி என்றும் கூறி மனிதனைக் கீழ்மைபடுத்தும் கொடுமை இங்கு போல் வேறெங்கும் இல்லை என்று மேடை ஏறி கூக்குரலிடுகிறார்கள் பலர். இந்து மதம் மனிதனை ஜாதி அடிப்படையில் தான் வைத்து எடை போட்டதா? மனிதனுடைய அறிவு, அனுபவம் ஒழுக்கம், ஞானம் இவற்றுக்கு இந்து மதத்தில் மதிப்பீடே இல்லையா? வைணவம் இதற்கு என்ன பதில் சொல்லுகிறது என்று பார்ப்போம்.

நம்மாழ்வார் திருவுள்ளம் என்று பொருள்படும் ஆசார்ய ஹ்ருதயம் என்ற ஒரு வைணவப் புனிதநூல் உண்டு. வைணவ இலக்கியங்களை 234 சூக்திகளால் வகுத்துக் கூறும் இந்நூல் சாதி பற்றியும் பேசுகிறது. சூக்தி 76ல் ''பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்நூல்களும் க்ராஹ்யங்கள்; பிறவி பார்க்கில் அஞ்சாம் ஒத்தும் அறுமூன்றும் கழிப்பனாம்'' என்பது தான் அந்த சூக்தி. இதை எழுதிய அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ரங்கநாதப் பெருமாள் சன்னிதியில் படித்துக் காட்டி அதைக் கேட்ட பெருமாளால் பாராட்டப் பெற்றவர் என்ற ஐதீஹ்யமும் உண்டு. எனவே இது பெருமாள் கருத்தும் கூட.

பேச்சு என்றால் மொழி என்று அர்த்தம். மொழி அடிப்படையிலே ஒரு சாத்திரத்தை எடை போடுவது என்று முடிவு செய்து வடமொழி நூல்கள் எல்லாம் உயர்ந்தவை என்று சொன்னால் வடமொழியில் அறிவுக்கு ஏற்காத நீதிக்குப் புறம்பான நூல்கள் எல்லாம் உண்டே, அவற்றை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? என்ற கேட்கிறார் இந்த நூல் ஆசிரியர். கிராஹ்யங்கள் என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டிவரும் என்று அர்த்தம். கள்ளப் பொய்நூல்களை யெல்லாம் – அவை சமஸ்க்ருதத்தில் இருக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காக – ஏற்றுக் கொள்ளப் போகிறீர்களா என்று கேட்கிறார் இவர். ஆரிய மொழியின் மாயை தமிழகத்தை மூடிவிட்டது என்று வசவு பாடும் வசனகர்த்தாக்கள் இங்கே சிந்திக்க வேண்டும். ஒரு நூல் தமிழில் இருந்து விட்டால் அதற்காக அந்த நூலைத் தள்ளுபடி செய்வதா என்று கேட்கும் இந்த நியாயவானைப் பற்றி தமிழுக்காக உயிரை விடுகிறோம் என்று கூறிக் கொள்ளுகிறவர்கள் அறிந்தாவத வைத்திருக்கிறார்களா? திராவிட மொழியில் உள்ள நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்காக வக்காலத்து வாங்கி ஒரு புத்தகமே எழுதி இருக்கும் இந்த மஹானைப் பற்றி,''எங்கள் திராவிடப் பொன்னாடு'' என்று மார் தட்டும் மாநிலவாதிகளுக்குத் தெரியுமா? ''தமிழ் எங்கள் உயிர் மூச்சு'' என்கிறார்களே அவர்களுக்கு தமிழ் தாழ்ந்து விடக் கூடாது என்று பாடுபடும் 'ஆசார்ய ஹ்ருதயம்' என்ற இந்தப் புத்தகத்தைப் பற்றித் தெரியுமா?

அந்தணர் மட்டுமே படிக்கலாம் என்ற வடமொழி வேதத்தைத் தமிழ்ப்படுத்தி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய

திருவந்தாதி திருவாய்மொழி என்று தமிழ் வேதங்களாக சடகோபன் அருளிய சாத்திரத்தைத் தரக்குறைவாக எடைபோடப் படக் கூடாது என்பதற்காக இந்த நாயனார் விடுக்கும் துணிகரமான அறிவிப்பைப் பார்த்தீர்களா? "வடமொழி உயர்வு என்று கண்மூடிக் கொண்ட சொல்லாதீர்கள். அதிலே சாக்கடைச் சரக்குகளும் உள்ளன. தமிழ்மொழி தானே என்று தள்ளிவிடாதீர்கள். அதிலே சந்தனக் குழம்பும் உள்ளது" என்று என்ன அழகாக ஆணித்தரமாக அறைகூவல் விடுக்கிறார் இந்த மஹான். இன்னொரு முறை உங்கள் உள்ளத்துக்குள் சொல்லிப் பாருங்கள். அதன் கருத்தாழம் உங்களுக்குப் புரியும். "பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய் நூல்களும் க்ராஹ்யங்கள்".

இந்த சூக்தியின் அடுத்த பகுதி, இந்து சமயம் சாதியைக் கண்டு ஏமாறுவதில்லை என்று சாடுகிறது. நாயனார் கூறுகிறார்: "பிறவி பார்க்கில் அஞ்சாம் ஓத்தும் அறுமூன்றும் கழிப்பனாம்".

அஞ்சாம் ஓத்து என்றால் ஐந்தாம் வேதமான பாரதம். அறுமூன்று என்றால் 6 x 3 = 18 அத்யாயம் உள்ள பகவத் கீதை. பாரதம் எழுதிய வியாசர் மச்சகந்தி என்ற மீனவப் பெண்ணுக்குப் பிறந்தவர். பகவத் கீதை சொன்ன கண்ணன் மாடு மேய்க்கும் ஆயர் குலத்தில் பிறந்தவர். ஜாதியை வைத்து ஒரு சாத்திரத்தைக் கொள்ளுவது தள்ளுவது என்று வந்தால் மீனவப் புத்திரன் எழுதிய பாரதத்தையும், ஆயர்மகன் சொன்ன கீதையையும் ஒதுக்க வேண்டி வருமே. அதைச் செய்வீர்களா என்று கேட்கிறார். இது இவருடைய கேள்வி மட்டும் அல்ல இந்து மதமே இதை கேட்கிறது. ஏனென்றால் இந்து சமயம் முக்கியத்துவம் கொடுப்பது ஞானத்துக்குத் தான். வருணத்துக்கு அல்ல. அதனால் தான் அது விதுரனைக் கொண்டாடுகிறது; சபரியை உயர்த்துகிறது: குகனை வணங்குகிறது; மங்கை மன்னனை ஆழ்வார் என்கிறது. ஞானம் எங்கிருந்தாலும் ஜாதி பாராமல் பேதம் பாராமல் மதிப்பு காட்டியது, காட்டுகிறது இந்துமதம். துர் அபிமானிகள் சிலர் இருந்தார்கள், இருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் களைகள் உள்ளன என்பதற்காக நெற் பயிர்களை ஏறெடுத்துப் பார்க்காமல் ஒரு முழு வயலையும் குப்பைமேடு என்று ஒதுக்கி விடலாமா? அப்படி ஒட்டு மொத்தமாக ஒரு தீர்ப்பு வழங்கினால் அது எந்த வகையில் நியாயம்?

இவற்றையெல்லாம் சிந்திக்காமல் சாதிப் பிரச்னையை ஒழிக்கிறோம் என்று கூறிக் கொண்டு, யாகாவாராயினும் நாகாக்க என்ற கட்டுப்பாடின்றி இந்து மதத்தையும் ஆத்திகத்தையும் பழித்து, கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி என்றும், கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்றும் முழங்குகிறார்களே! அவர்களைப் பெற்ற தாய்தந்தையர் ஆத்திகர் என்ற சொரணை இல்லையா? இந்தக் கணக்குப்படி பார்த்தால் அந்தப் பெற்றோர் காட்டுமிராண்டிகள் தானே! அதாவது இந்தக் கூட்டத்தினர் "நாங்கள் பரம்பரை பரம்பரையாக காட்டுமிராண்டிகள்" என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆஹா! பேஷ்! மகிழ்ச்சி! ஒப்புக் கொண்டதற்கு நன்றி!

பார்ப்பன ஆதிக்கம் பார்ப்பன ஆதிக்கம் என்று கூறுகிறார்களே அதைப்பற்றி இந்த ஆசார்ய ஹ்ருதயம் என்ன சொல்கிறது என்று அடுத்த இதழில் எழுதுகிறேன்.